**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti**

**Deposition of Witness**

C.C. 347 /2017

PW-5 19-11-2024

| | |
|---|---|
| Name | பாலாஜி |
| Father's/Husband's Name | சின்னத்துரை |
| Village | திருநெல்வேலி |
| Taluk | திருநெல்வேலி |
| Caste | – |
| Calling | உதவி பேராசிரியர் |
| Religion | – |
| Age | 40 |

(A1A2 present)

**முதல்விசாரணை**

1) நான் தற்போது தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிகிறேன்.06.05.2016 தேதி சவலப்பேரியை சேர்ந்த திரு. பாபு என்பவர் தன்னை அடையாளம் தெரிந்த 6 நபர்கள் கம்பாலும் அன்றைய பொழுது மாலை 8.40 மணியளவில் கயத்தார் குமாரகிரி கோவில் அருகே தாக்கினார்கள் என்று கூறினார். அ வருக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் 1) 1.4x2 செ.மீ அளவில் சிராய்பு காயம் இடது முன்நெற்றியில் காணப்பட்டது. 2) 2x2 செ.மீ அளவில் ஒரு வீக்க காயம் வலது கண்ணின் மீது உள்ளது. அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்டுள்ள 2 காயங்களும் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய காயச்சான்றுடன் டிஸ்சார்ஜ் சம்மரி அசாஆ 2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) மேற்கண்ட காயங்களானது ஒருவர் தடுமாறி கீழே விழும்போது ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். மருத்துவமனையில் சேர்க்க வரும்போது உடன் வந்தவர் யார் என்பது நான் வழங்கிய அறிக்கையில் துலங்காது என்றால் சரிதான். சிகிச்சையில் சேரும்போது சம்மந்தப்பட்ட சம்பவத்தில் தன்னை அடித்த நபர்கள் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் கம்பை காண்பித்து சான்று அறிக்கை பெறப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்னமாதிரி சொன்னநேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் காயச்சான்று வழங்கினேன் என்பது உண்மையல்ல என்றாலும் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது )**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

.

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.